RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22489

# முருக வழிபாட்டில் பழந்தமிழர் நம்பிக்கைகள்

சு. சதாசிவம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி), தாம்பரம், சென்னை - 600059. தமிழ்நாடு, இந்தியா

# Beliefs of Ancient Tamils in Lord Muruga Worship

S. Sathasivam [a, *]

[a] Department of Tamil, Chennai Christian College, Tambaram, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author:
sathasivam@mcc.edu.in

Received: 25-02-2022
Revised: 23-09-2022
Accepted: 06-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

The major objective of the research is to explore the beliefs of ancient Tamils in Lord Muruga worship. This research is designed in a qualitative approach. The library work is used for this study. The findings show that the characteristics of Lord Muruga enshrined in the shrines of Arupadai Vidu in Thiruparakunram, Thirusiiralaivai, Thiruavinkudi, tirueragam, Thirutani and Palamuthirsolai. This study is useful in teaching the younger generation about the ancient Tamils belief in Lord Muruga worship. The research claims to be the first such attempt to do a study regarding the ancient Tamils belief in Lord Muruga worship.

**Keywords:** Beliefs, Ancient Tamils, Lord Murugan, Worship.

## முன்னுரை

மனித வாழ்வில் தவிர்க இயலாத மிக முக்கியமானதொரு பழக்கம் வழிபாடாகும். இதன் காலம் எதுவென எவரால் கூறவியலும். மனித இனம் தோன்றி பழைய கற்காலம், நடுகற்காலம், புதிய கற்காலம் ஆகிய காலகட்டங்களில் தொடங்கி, இன்று வரை பல்வேறு படிநிலைகளில் வழிபாடானது தொடர்ந்து மக்களிடத்தில் இருந்து வருகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்பவன் இறைவன் என்பதும், தமக்குள் ஏற்படும் எல்லா விளைவுகளுக்கும் இறைவனே காரணம் என்பதும் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வருகிறது. இறைவன் குறித்த பல கருத்துகளும் நம்பிக்கைகளும் இருப்பினும், முருக வழிபாட்டில் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் முருகு பெயர்க் காரணம், பழந்தமிழர்களின் முருக வழிபாட்டின் நம்பிக்கைகள், அறுபடை வீடுகளில் முருகன் வழிப்பாடு ஆகிய பிரிவுகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

## முருகு - பெயர்க் காரணம்

இலக்கியங்களிலும் இலக்கண நூல்களிலும் முருகன் குறிஞ்சி நிலக்கடவுளாக அறியப்படுகிறான். முருக வழிபாடு தொடங்கிய காலம் என்பது யாவராலும் அறுதியிட்டுக் கூறவியலாத பழமையுடையது. 4440 ஆண்டுகள் இருந்ததாகக் கருதப்படும் முதற்சங்கத்தில் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளுடன் குன்றெறிந்த முருகப்பெருமானும் வீற்றிருந்தார் என்பது இறையனார் களவியல் அகப்பொருளுரையால் அறியப்படுகிறது. முருகு என்பதற்கு வடமலை நிகண்டில் ஈசுவர பாரதி,

“முருகெனும் பெயரே முருகக் கடவுளும்
இளமையும் விழாவு மெழிலும் வாசமும்
மதுவு மெலுமிச்சும் வழங்கப் பெறுமே” (வடமலை நிகண்டு, நூ.1260)

என்று கூறுகின்றார்.

முருகன், இளமை, திருவிழா, அழகு, மணம், கள், எலுமிச்சை என்பன முருகு என்பதன் பொருளாக வடமலை நிகண்டு கூறுகிறது.

முருகு என்பதற்கு விழா, இளமை, மாவெலு, நாற்றம், சுப்பிரமணியன், கள்ளு, தேவர், திருநாள், அகில், எழிற்சி, வெறியாட்டாளன், எழுமிச்சு, குறிஞ்சிப்பறை, அழகு, வாச்சியப் பொதுப்பேர் எனவும், முருகன் என்ற சொல்லுக்குக் கந்தன், இளமையுடையோன் எனவும் அகராதி நிகண்டில் (ப.96) இரா. நாகசாமி கூறுகின்றார் (Nagasamy, 1983).

நா.கதிரைவேற்பிள்ளை தமது தமிழ் மொழி அகராதியில் (ப.1170) முருகன் என்பதற்கு இளையோன், குமரன், வெறியாட்டாளன், பாலசுப்ரமணியக் கடவுள் எனவும் முருகு என்பதற்கு அகில், அழகு, இளமை, எலுமிச்சை, எழுச்சி, கள், காதணியில் ஒன்று, குமரன், திருவிழா, தேன், வாசனை, வெறியாட்டாளன் எனவும் பொருள் தருகின்றார்.

வீரமாமுனிவர் தமது சதுரகராதியில் (ப.195) முருகன் என்பதற்கு இளையோன், குமரன், வெறியாட்டாளன் எனவும், முருகு என்பதற்கு அகில், அழகு, இளமை, எழுச்சி, கள், திருவிழா, முருகன், வாசனை எனவும் பொருள் தருகின்றார். தொல்காப்பியர் ‘சேயோன் மேய மைவரை உலகமும்’ (அகத்.நூ.5:2) என முருகனைக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு முருகு என்பதற்கான பொருள் நிகண்டுகளிலும் பிற்கால அகராதிகளிலும் காணப்படுகின்றன.

## குறிஞ்சிநில வழிபாடு

குறிஞ்சி நில மக்கள் வழிபடும் முருகக் கடவுளுக்கு பலி கொடுத்து வழிபடும் முறைக் காணப்படுகிறது. தலைவிக்கு உண்டான நோய்க்குக் காரணம் இன்னதென அறியாத தாய் ஒருத்தி கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்கிறாள். கழற்சிக்காய் முதலியவற்றைக் கொண்டு குறி சொல்லும் கட்டுவிச்சி தலைவிக்கு ஏற்பட்ட இந்நோய் முருகு அணங்கியதால் என உரைக்கிறாள். இதனால் முருக வழிபாடு நடத்தும் வேலனை அழைத்து முருகனின் சினம் தணிய பல வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. அப்போது வேலன் ஆட்டுக்குட்டி ஒன்றின் கழுத்தை அறுத்து மலைப்பகுதியில் அதிகம் விளையும் தினை அரிசியை அதில் கலந்து பலவகை இசைக்கருவிகளும் ஒலிக்க முருகனுக்குப் படைக்கிறான். இதனைக் குறுந்தொகை,

“மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்

செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்க

வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி"

என்றும்,

"முருகயர்ந்து வந்த முதுவாய் வேல

சினவ லோம்புமதி வினவுவ துடையேன்

பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு

சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி

வணங்கினை.."

என்றும் குறிப்பிடுவதால் அறியலாம் (Nagarajan, 2017). தமிழ் மக்களின் தெய்வ வழிபாட்டில் மிகவும் பழமையானது முருக வழிபாடாகும். இக்கடவுளுக்குப் பழந்தமிழர்களால் எழுப்பப்பட்ட அறுபடை வீடுகளுமே இதற்குச் சான்றாக அமைகின்றன. மேலும் முருகனின் வருந்துதலையுடைய கோயில் ஒன்று குறித்துப் புறநானூறு,

"அணங்குடை முருகன் கோட்டத்து ..."

எனக் குறிப்பிடுகிறது (Nagarajan, 2017). அழகிய மணிகளுடன் கூடிய ஒளிரும் முருகனின் திருச்சீரலைவாய் கோயில் குறித்து அகநானூறு,

"திருமணி விளக்கின் அலைவாய்ச்

செருமிகு சே எயொடு" (அகம். 266:20-21)

எனக் குறிப்பிடுகிறது (Jeyabal, 2011). திருச்சீரலைவாய் கோயில் கடல் அலையின் அருகே உள்ளது என்றும், அங்கு செந்தில் வேலவன் குடி கொண்டுள்ளான் என்றும் புறநானூற்றில் மருதன் இளநாகனார்,

"தாழ் நீர்

வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தில்

நெடுவேள்."

என்ற தமது பாடலடிகள் வழிக் குறிப்பிடுகின்றார் (Avvai Duraisamy Pillai, 1968). முருகன் 'கொற்றவைச் சிறுவன்' என்றும் குறிப்பிடப்படுகிறான். அகப்பாடல்களில் வரும் முருக வழிபாடு என்பது பெரும்பாலும் வெறியாட்டுடன் தொடர்புடையதாகவே அமைகிறது. வெறியாட்டு மற்றும் வழிபாட்டில் கடவுளுக்கு பலியிட்ட செய்தி குறித்து அகப்பாடல்கள்,

"பலி பெறு கடவுட் பேண்மார்" (நற். 251:8)

"நெடு வீழ் இட்ட கடவுள் ஆலத்து

உகுபலி அருந்திய தொகுகருங் காக்கை" (நற்.343:4-5)

"மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்

தேம்பலிச் செய்த" (ஐங். 259:3-4)

என்று குறிப்பிடுகின்றன. பழந்தமிழரின் வழிபாட்டு முறையில் பலியிடுதல் வழக்கம் முக்கிய இடம் பெறுகிறது (Swaminatha Iyer, 1986).

## அறுபடை வீடுகள்

குறிஞ்சி நிலக் கடவுள் முருகனின் அவதாரங்களும் ஆற்றல்களும் அளபெரியது. முருகனின் தலங்கள் பலவும் மலை பகுதியின் மீது அமைந்திருப்பதற்குக் காரணம் அவன் குறிஞ்சி நில மக்களின் முழுமுதற் கடவுள் என்பதாலே ஆகும். பழந்தமிழ் மக்களின் பழமையான வழிபாடுகளை பறைசாற்றுவதாய் முருகனின் அறுபடை வீடுகளும் அமையப்பெற்றுள்ளன. அவை 1. திருப்பரங்குன்றம், 2. திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) 3. திரு ஆவினன்குடி (பழநி) 4. திரு ஏரகம் (சுவாமி மலை) 5. குன்றுதோறாடல் (திருத்தணி) 6.பழமுதிர்சோலை என்பனவாகும். இவையல்லாது திருச்செங்கோடு காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் முருகனுக்குப் பழமையான தலங்கள் அமைய பெற்றுள்ளன.

## திருப்பரங்குன்றம்

முருகனின் அறுபடை வீடுகளுள் முதலாவதாக அமையப் பெற்றது திருப்பரங்குன்றமாகும். மதுரை மாநகரம் மிகவும் பழமை வாய்ந்தது. அதன் கோபுர வாயிலில் எப்போதும் வெற்றிக்கொடி அசையும். வரிந்து கட்டப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்றித் தொங்கும். நகரில் பல மாடங்களைக் கொண்ட தெருக்கள் பல நிறைந்திருந்தன. இவ்வகையான சிறப்புகளை உடைய மதுரை நகரின் மேற்கே நெல்வயல்கள் நிறைந்திருந்தன. அவ்வயல்களில் மலர்ந்துள்ள தாமரை மலர்கள் மீது வண்டுக் கூட்டங்கள் இரவுப் பொழுதில் துயில்கொள்ளும். விடியற் காலையில் துயில் களையப் பெற்றதும் நெய்தல் மலர்களில் உள்ள தேனைப் பருகும். சூரியன் உதிக்கப் பெற்றதும் சுனையில் உள்ள மலர்களிடம் இருந்து ஆரவாரஞ் செய்யும். இவ்வகை அழகுகள் நிறைந்த இடத்திலுள்ள திருப்பரங்குன்றம் என்னும் கோயிலில் முருகக் கடவுள் எழுந்தருளியிருப்பார் என்பதை.

“மாடம் மலி மறுகின் கூடற்குடவயின்

இளஞ்சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த

முள்தாட் தாமரைத் துஞ்சி வைகறைக்

கற்கமழ் நெய்தல் ஊதி எல்படக்

கண் போல் மலர்ந்த காமரு அனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்

குன்று அமர்ந்து உறைதலும் உரியன்” (திருமுரு. 71-77)

என்று வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும் தெய்வானையின் கணவனாகிய முருகக் கடவுள் கடம்ப மலர்மாலை அணிந்த மார்புடையவன் என்பதும் குதிரை முகத்தையும் மனித உடலையும் கொண்ட சூரபத்மன் என்னும் அரக்கனின் கொற்றம் அடங்க அவனது அறுவகைப் படைகளையும் அவனது செவ்வேல் அழித்தது என்பதும் திருப்பரங்குன்றத்தின் சோலையில் தெய்வமகளிர் முருகனின் பெருமைகள் விளங்கும்படி ஆடிப்பாடி மகிழ்ந்தனர் என்பதும் அறியப்படுகிறது.

## திருச்சீரலைவாய்

அறுபடை வீடுகளில் இரண்டாவதாக அமையப் பெறுவது திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர் தலமாகும். கடலாடும் கரையோரத்தே அமையப் பெற்றதால் திருச்சீரலைவாய் என்னும் பெயர் வரலாயிற்று. இங்கு முருகக் கடவுள் பிணிமுகம் என்னும் யானையின் மீது எழுந்தருளுவார். அவர் அணிந்திருக்கும் கோடகம், கிம்புரி, மகுடம், பதுமம், தாமம் என்னும் ஐந்து வெவ்வேறு வடிவுடைய ஒளிவிடும் இரத்தினங்கள் முடிகளில் பதிக்கப்பட்டுள்ளன. அவரது

திருமுகம் தவத்தை முடிப்பவர்களது உள்ளத்தில் விளங்கும் ஒளி போல் விளங்கும். சீரலைவாயில் முருகப் பெருமான் எழுந்தருளும் போது ஆகாயத்தில் துந்துமி ஒலிக்கும். வாத்தியங்களும் வெண்சங்கும் முழங்கும். இடிமுழக்கம் போன்று முரசு அதிரும், பல புள்ளிகள் உள்ள இறகுகளுடைய மயில் வெற்றிக் கொடியிலிருந்து ஒலிக்கும் என்பதை நக்கீரர்.

"பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ

விசும்பு ஆறு ஆக விரைசெலல் முன்னி

உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச்சீர்

அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே" (திருமுரு. 122-125)

என்று கூறுகின்றார். ஆறுமுகங்களின் இயல்புகளும் பன்னிரு கைகளின் தொழில்களும் நக்கீரரால் விளங்கப்பட்டுள்ளன.

## திரு ஆவினன்குடி

பழநி மலையின் அடிவாரத்திலுள்ள முருகக் கடவுளின் மூன்றாவது திருத்தலம் திரு ஆவினன்குடி ஆகும். இங்கு வலம்புரி சங்கை ஒத்த நரைத்த முடிகளையுடைய மரவுரி தரித்த முனிவர்கள் முருகக் கடவுளை வழிபட்டனர். இத்தகைய முனிவர்கள் பல நாட்கள் பட்டினி இருந்தனர். வெறுப்பும் சினமும் அவர்களிடம் தோன்றுவதில்லை. அவர்களின் அறிவு வல்லுநராலும் அறியமுடியாத தன்மையுடையது. மெய் வருத்தம் அடைந்தாலும் மனவருத்தம் அடையாத இயல்பினர் என்பதை நக்கீரர்,

"கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்

துனிஇல் காட்சி முனிவர்" (திருமுரு. 135-137)

என்று கூறுவதால் அறியலாகின்றது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே பிரம்மனும், திருமாலும், சிவபெருமானும் செய்து வந்தனர். படைத்தல் தொழிலையுடைய பிரமனின் செருக்கினை அடக்கும் பொருட்டு முருகக் கடவுள் அவனை சிறைப்படுத்தினார். அந்நேரத்தில் படைப்புத் தொழில் நின்று போனது. அதனால் திருமால், சிவன் ஆகியோர்க்கு காத்தல் அழித்தல் தொழில்கள் இல்லையாயின. முருகக் கடவுளின் சினத்தைத் தணித்து பிரம்மாவினைச் சிறையினின்று மீட்க எண்ணிய சிவன், திருமால், இந்திரன் மற்றும் தேவர்கள் முதலானோர்களும் வானத்தே சுற்றித் திரிந்தனர். இந்நிலையில் கந்தருவர் தமது மகளிரோடு யாழ்வாசித்துப் பின்னே செல்ல முனிவர்கள் முன்னே சென்றனர். இவ்வகைத் தோற்றத்துடன் முருகக் கடவுள் தெய்வயானையாருடன் ஆவினன் குடியில் எழுந்தருளினார் என்பதை நக்கீரனார்,

"தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன்" (திருமுரு. 175-176)

என்று கூறுகின்றார்.

## திரு ஏரகம்

கும்பகோணம் அருகேயுள்ள சுவாமிமலை திருஏரகம் என அழைக்கப்படுகிறது. அந்தணர் இயல்பும் வழிபாடும் இங்கு விளங்கப்படுகின்றது. அந்தணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையுடையவர். நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசாரியங் காக்கும் இயல்புடையவர். அகவனீயம், தக்கணாக்கினி, காருகபத்தியம் என்னும்

முத்தீ ஓம்பும் செல்வமுடையர். நூலணிவதற்கு முன் ஒன்றும் அணிந்தபின் ஒன்றுமாகிய இருபிறப்புடையவர். இவ்வகைப் புனிதமுடைய அந்தணர் மணமுடைய மலர்களைக் கையில் ஏந்தி 'நமோகுமராயா' என்னும் மந்திரத்தை உச்சரித்து முருகக் கடவுளை வழிபட அவரும் அகம் மகிழ்ந்து திருஏரகத்தில் எழுந்தருளினார் என்பதை,

"ஆறு எழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி

நூஇயல் மருங்கில் நவிலப் பாடி

விரைஉறு நறுமலர் ஏந்தி பொது உவந்து

ஏர்கத்து உறைதலும் உரியன்" (திருமுரு. 186-189)

என்று நக்கீரர் கூறுவதால் அறியப்படுகின்றது.

## குன்றுதோறாடல்

மலைப்பகுதியில் வாழும் வேடர் வேட்டையாடுதலைத் தொழிலாய்க் கொண்டவர். தேனைப் புளிக்க விட்டுச் செய்த கள்ளை தமது சுற்றத்துடன் உண்டு களிப்பர். தொண்டகப்பறையைக் கொட்டி குரவைக் கூத்து ஆடுவர். இக்கூத்தினைக் கண்ணுற்ற கிடாயையும், மயிலையும், கோழிக் கொடியையும் உடைய முருகக் கடவுள் தாமும் ஆடலை விரும்புவார். இதனை நக்கீரர்,

"மென்தோள் பல்பிணை தழீஇ தலைத்தந்து

குன்றுதொறு ஆடலும் நின்ற தன் பண்பே" (திருமுரு. 216.217)

என்று கூறுகின்றார். வேலினைக் கையிலேந்திய வேலன் மீது முருகன் வெளிப்படுவார் என்பது அக்கால மக்களின் நம்பிக்கையாக இருந்துள்ளது (Kirushnamoorththi, 2016).

## பழமுதிர்சோலை

இது அழகர் மலை என்றும் அழைக்கப்படும். இம்மலையிடத்து ஆரவாரத்துடன் அருவிகள் குதித்தோடும். அவை அகில், சந்தனம் போன்ற மரங்களை அடித்துக்கொண்டு வரும். மூங்கிலின் வேர்கள் அறுபட அடியோடு சாய்க்கும். சுரபுன்னை மலர்களை உதிர்த்துப் பெண் குரங்கையும் ஆண்குரங்கையும் நடுக்கமுறச் செய்யும். வாழை முறியவும் தென்னையின் இலைகள் உதிரவும் மோதும். மயில்களும் கோழிகளும் பயந்தோடச் செய்து ஆண் பன்றிகளும் கரடிகளும் கல்லறைகளில் நுழையவும், காட்டுமாடுகள் முழங்கவும் செய்து ஆரவரிக்கும். இவ்வகை அருவிகள் உடைய பழமுதிர்ச் சோலையில் முருகக் கடவுள் எழுந்தருள்வார் என்பதை,

"இழுமென இழிதரும் அருவி

பழம்முதிர் சோலைமலை கிழவோனே" (திருமுரு. 316.317)

என்று வரும் பாடலடிகள் வாயிலாக அறியப்படுகிறது. குறமகள் முருக பூசை செய்யும் வகைகளும், முருகனது இருப்பிடங்களும், முருகனை வழிபடும் விதமும் தம்மை வழிபடும் பக்தர்களுக்கு முருகக் கடவுள் அருள் புரியும் தன்மையும் விளக்கப்படுகிறது.

## முருகக் கடவுளின் தன்மைகள்

சிவபெருமான் பாடிய பாடல் குற்றம் உடையது என்றுரைத்த நக்கீரர் சிவனின் சினத்திற்கு ஆளாகி கடும் நோயுற்றார். நோய்த்தீர சிவனை வழிப்பட்ட நகீரருக்கு கயிலையைக் கண்டால் நோய்த் தீருமென இறைவனின் கட்டளைக் கிடைக்கப் பெற்றது. அதன்பொருட்டு கயிலையை நோக்கிப் பயணித்த போது திருப்பரங்குன்றில் பூதம் ஒன்றால் குகையில் அடைக்கப்பட்டார்.

அப்போது திருமுருகாற்றுப்படையைப் பாடி முருகன் அருளால் குகையிலிருந்து மீண்டார் என்று ஒரு கதை வழங்கப்பட்டு வருகின்றது

முருகன் ஆறுமுகங்களையும் பன்னிரு கைகளையும் உடையவன். முருகக் கடவுளின் ஒரு முகம் இருண்ட பெரிய இவ்வுலகம் குற்றமின்றி விளங்கும் பொருட்டு பல கதிர்களைத் தோற்றுவிக்கும். ஒரு முகம் தன்னை வழிபடும் அன்பர்களின் குறைகளைத் தீர்க்கும். ஒரு முகம் அந்தணர் செய்யும் வேத முறையிலான யாகங்களில் தீமை வராமற் காக்கும். ஒரு முகம் வேதத்தின் மறைபொருளை ஆராய்ந்த முனிவர்கள் மகிழும்படி அவற்றை உணர்த்தி விளக்குவிக்கும்.

ஒரு முகம் மாறுபட்ட பகைவரைக் கொன்று சினத்துடன் போர்க்களத்தை விரும்பும். ஒரு முகம் குறமகளாகிய வள்ளியுடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும். அதேபோல் முருகக் கடவுளின் பன்னிரு கைகளும் பன்னிரு தொழில்களையுடையன. முருகன் சிவனுக்கும் கொற்றவைக்கும் பிறந்த செல்வன் என்றும் வள்ளி, தெய்வானை ஆகிய இரு மனைவியரை உடையவன் என்றும் சூரபத்மன் என்னும் அரக்கனைப்போரில் வெற்றிகண்டவன் என்றும் தம்மை வழிபடும் பக்தர்க்கு இன்னலைப் போக்கி வீடுபேறு அளிக்கும் தன்மையுடையவன் என்றும் திருமுருகாற்றுப்படையின் வழி அறியப்படுகின்றது.

## முடிவுரை

அழகு, இயற்கை, மணம், கடவுள் தன்மை உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் முருகப்பெருமான் பொருள் கொள்ளப்படுகிறான். சங்க கால முதல் சமகாலம் வரையிலான இலக்கிய வகைமைகளிலும் மக்களின் வாழ்வியல் சூழலிலும் முருகக் கடவுள் தனித்த இடம் பிடித்துள்ளமையை அறியமுடிகிறது. இயற்கையோடு இயைந்த குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் இருந்து முருக வழிபாடு தொடங்குகிறது. தமிழ்நாட்டில் தொடங்கிய முருக வழிபாடு மலேசியா, மொரீசியசு, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் பலஇன மொழி மக்களால் வழிபடும் நிலையை எட்டியுள்ளது. முருக வழிபாடு வெவ்வேறு நிலைகளில் உலகம் முழுமையும் பரவி உள்ளமையை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை ஆகிய அறுபடை வீடுகள் மட்டுமல்லாது மருதமலை, வள்ளிமலை, வயலூர், வல்லக்கோட்டை, விராலிமலை, திருப்போரூர், வடபழனி, குமரகுன்றம், சென்னிமலை, கந்தகோட்டம், சிறுவாபுரி, மயிலம், வேலாயுதம் பாளையம், மல்லிகுந்தம் உள்ளிட்ட இன்னும் ஏராளமான தளங்களில் முருகன் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகிறான். முருகனின் புகழ் அடியவர்களாலும், ஞானியர்களாலும், புலவர்களாலும் பரவுவது ஒரு பக்கமெனில் கதைகள், நாடகங்கள், பாடல்கள், திரைப்படங்கள் வாயிலாகவும் இன்று அதிகம் பரவி, தமிழ் மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளாக முருகன் திகழ்கிறான்.

## References

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Kirushnamoorththi, (2016) Thirumurugaatru Padai, Narmadha Padhipagam, Chennai, India

Nagarajan, V. (2017) Kurunthogai Mulamum Uraiyum, Sixth Edition, New Century Book House, Chennai, India.

Nagasamy, R. (1983) Vadamalai Nikandu, U.V.S Nilayam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1986) Nattrinai Moolamum Uraiyum, U.Ve.Sa. Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License